පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
பொலிஸ் ஊடகப் பிரிவு
POLICE MEDIA DIVISION
14 ஆம் மாடி, சுகுறுபாய,

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දිනය<br>திகதி<br>Date | 08.03.2026<br>நேரம் 1915 மணி | දුරකථන<br>தொலைபேசி<br>Telephone | 011-2887973 | මගේ අංකය<br>எனது இலக்கம்<br>My No | D/Media/out/411/2026 | ඊ මේල්<br>மின்னஞ்சல்<br>E-mail | dir.media@police.gov.lk |

## பொலிஸ் தடையகற்றல் அறிக்கைகள் வழங்கும் முறைமை தொடர்பாக பொதுமக்களுக்கான அறிவித்தல்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரஜைகள் பல்வேறு தேவைகளுக்காக பொலிஸ் தடையகற்றல் அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்காகவும் அதற்கு தொடர்புடைய நடைமுறைகள் தொடர்பாகவும் இலங்கை பொலிஸ் தொடர்ந்தும் அறிவித்தல் விடுக்கின்றது.

பொலிஸ் தடையகற்றல் அறிக்கைகளுக்காக விண்ணப்பிக்கும் நபர் ஒருவர் ஏதேனும் சட்ட விரோத செயல்கள் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளில் தொடர்புப்படாது சட்டத்தை மதிக்கும் நபராக இருக்கும் போது அவர்களுக்கு பொலிஸ் தடையகற்றல் அறிக்கை மிகவும் விரைவாக வழங்க முடியும். எவ்வாறாயினும் சட்டவிரோத அல்லது குற்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிர்மறையான தடையகற்றல் அறிக்கையாக வழங்கப்படும்.

இலங்கை பொலிஸ் இணையதளமான www.police.lk இற்கு சென்று **E-Service** பகுதியில் **தடையகற்றல் அறிக்கை** (**Clearance Certificates**) என்பதைத் தெரிவு செய்து, அதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதினூடாக பொலிஸ் தடையகற்றல் அறிக்கையை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

இலங்கை பொலிசால் வெளிநாடுகளில் வசிக்கும் பிரஜைகள் தங்களது பொலிஸ் தடையற்றல் அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு ரூபாய் **5,100/-** (ஐந்தாயிரத்து நூறு ரூபாய்) கட்டணம் செலுத்த வேண்டும். அதற்கான பணம் செலுத்தப்பட்ட ரசீது கிடைத்த பின்னர் சுமார் **14 நாட்களுக்குள்** அறிக்கையை பெற முடியும்.

வெளிநாடுகளில் வசிக்கும் நபர்கள் தங்களின் விசா காலத்தை நீட்டித்தல், பணிக்காலத்தை நீட்டித்தல் அல்லது பிற அதிகாரப்பூர்வ தேவைகளுக்காகவும் பொலிஸ் தடையகற்றல் அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கின்றனர். இதற்காக முக்கியமாக இரண்டு விண்ணப்ப முறைகள் உள்ளன. அதாவது,

- நிகழ்நிலை முறைமை (Online System)

- வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதரகங்கள் அல்லது உயர்ஸ்தானிகராலயங்கள் ஊடாகவும் விண்ணப்பித்தல்.

மேற்கண்ட முறைகளின் மூலம் விண்ணப்பிக்கும்போது, தொடர்புடைய பொலிஸ் பிரிவுகள், தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவை கட்டாயமாக குறிப்பிடப்பட வேண்டும்.

உள்நாட்டு பிரஜைகளுக்கு கல்வி நடவடிக்கைகள், வணிகம் பதிவு செய்தல், பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்களில் இணைதல் போன்ற தேவைகளுக்காகவும் இலங்கை பொலிஸ் தடையகற்றல் அறிக்கைகளை கோருகின்றனர். இதற்காக தடையகற்றல் விண்ணப்பப் படிவம், தமது வசிப்பிடத்தை உறுதிப்படுத்தும் கிராம சேவகர் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு ஆகியவற்றுடன் தாம் வசிக்கும் பகுதியின் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு விண்ணப்பிக்கலாம். அதற்கமைய, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவர்கள் 48 மணித்தியாலயத்திற்குள் விண்ணப்பதாரர் தொடர்பான தேவையான விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் தடையகற்றல் அறிக்கை வழங்க நடவடிக்கை எடுப்பார்.

பொலிஸ் தடையகற்றல் அறிக்கை விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரர்கள் சரியான தகவல்களை வழங்க வேண்டும். தவறான தகவல்கள் வழங்கப்பட்டால் அந்த அறிக்கை பெற நீண்ட காலம் எடுக்கும். மேலும், விண்ணப்பதாரருக்கு எதிராக நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருந்தால், அல்லது ஏதேனும் காரணத்தால் வெளிநாட்டிலிருந்து நாடுகடத்தப்பட்டிருந்தால், அல்லது விண்ணப்பதாரர் முப்படை அல்லது பொலிசில் பணியாற்றுபவரா என்பதையும் விண்ணபத்தில் குறிப்பிடுவது கட்டாயமாகும்.

தடையகற்றல் அறிக்கை விண்ணப்பித்த பின்னர் அதில் திருத்தம் செய்ய வேண்டியிருந்தால், விண்ணப்பம் அனுப்பிய 72 மணிநேரத்திற்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலம் இலங்கை பொலிஸ் தடையகற்றல் பிரிவுடன் தொடர்பு கொண்டு திருத்தம் செய்யலாம்.

**தொடர்பு இலக்கங்கள்:**

**WhatsApp:** 071 8592990
**தொலைபேசி:** 011 2439185 / 011 2439186 / 011 2122800

மேற்கண்ட தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்ள பிரசாரம் செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொலிஸ் ஊடகப் பிரிவு.